# 2

# தேசிய உற்பத்தியும் செலவும்

இலங்கைப் பொருளாதாரம் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மீள்தளமிடப்பட்ட மதிப்பீடுகளின்படி 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 1.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015இன் முதலரைப்பகுதியில் 5.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட வலுவான வளர்ச்சியும் வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் மீட்சியும் இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தன. தாழ்ந்த மற்றும் உறுதியான பணவீக்கச் சூழலில் தூண்டுதலளிக்கும் நாணயக் கொள்கை நிலை தொடர்ச்சியாகக் காணப்பட்டமை மற்றும் இக்காலப்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் என்பன தேறிய வெளிநாட்டுக் கேள்வியின் மெதுவான தன்மை மற்றும் 2015இன் முதலரைப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற கொள்கைகள் என்பனவற்றிற்கு மத்தியிலும் வளர்ச்சிக்கு ஆதரவளித்தன. கொள்கை வகுக்கும் சூழலில் காணப்பட்ட உறுதியான தன்மை மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை நிலைமைகளில் காணப்பட்ட முன்னேற்றம் என்பனவற்றிலிருந்து ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் பொருளாதாரம் நன்மைகளைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார வளர்ச்சியானது பரந்த அடிப்படையில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சியை நோக்கி சாதகமாக பங்களிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பாரம்பரிய அதே போன்று எழுச்சியடைந்து வரும் பணிகள் நடவடிக்கைகள் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும். மேலும் குறிப்பாக தயாரிப்பு கைத்தொழில் நடவடிக்கைகளின் மீட்சியும் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை கட்டுமாண நடவடிக்கைகள் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2015இல் அபிவிருத்திகள்

### உற்பத்தி

- **2015இன் முதலரைப்பகுதியில் மொ.உ.உ.உற்பத்தி 2014இன் தொடர்பான காலப்பகுதியின் 1.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.6 சதவீதத்தினால் (2010இன் நிலையான விலைகளில்) வளர்ச்சியடைந்தது.** இச்சாதனைமிக்க வளர்ச்சிக்குப் பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கமும் வேளாண்மை மற்றும் கைத்தொழிலுடன் தொடர்பான நடவடிக்கைகளில்[1] ஏற்பட்ட மீட்சியும் முக்கிய உந்துதலாக அமைந்தன. இதன்படி, ஆண்டின் முதலரைப்பகுதியில் பெறுமதிசேர் நியதிகளில் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு நிதியியல், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துப் பணிகள், ஏனைய ஆளணிப் பணிகள், அரச பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகப் பணிகளில் பதிவு செய்யப்பட்ட உயர்ந்த பங்களிப்பே முக்கிய காரணமாகும். ஆண்டின் முதலரைப்பகுதியில் வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி என்பனவற்றின் பெறுமதிகூட்டப்பட்ட ஆண்டின் முதலரைப்பகுதியில் 3.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு அரிசி, கடல் மீன்பிடி மற்றும் நீரியல் மீன்வளர்ப்பு நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்ட வளர்ச்சி முக்கிய காரணமாக விளங்கிய வேளையில் கைத்தொழிலுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் பெறுமதிசேர் நியதிகளில் 1.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சியே முக்கிய காரணமாகும்.

**வரைபடம் 2.1 காலாண்டு மொ.உ.உ. வளர்ச்சி வீதங்கள்(அ)**




(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மீள்திருத்தப்பட்ட அடிப்படை ஆண்டிற்கான (2010) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

- **2015இல் பொருளாதாரம் 2014இல் பதிவு செய்யப்பட்ட 4.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டது.** பணிகள், கைத்தொழில் மற்றும் வேளாண்மை என்பன இவ்வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுமிடத்து ஒட்டுமொத்த வளர்ச்சிப் பரந்த அடிப்படையினைக் கொண்டிருக்கும் என எறிவு செய்யப்பட்டது. பணிகள் நடவடிக்கையில் காணப்பட்ட இவ்வளர்ச்சி உத்வேகம் நிதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்களில் அரச பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணிகள் என்பனவற்றில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புடன் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, கட்டுமான நடவடிக்கைகள் படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றமையானது தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் சேர்ந்து கைத்தொழிலுடன் தொடர்பான வளர்ச்சிக்குப் பங்களித்தது. மேலும், வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடியுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் அரிசி, ஏனைய தானியங்கள் மற்றும் சமையல் எண்ணெய் தயாரிக்கும் பழங்கள் மற்றும் பழத்தின் பகுதிகள் என்பனவற்றின் வளர்ச்சியிலிருந்தான உயர்ந்த பங்களிப்புடன் மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சி

### வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி

- **2015இன் முதலரைப்பகுதியில் வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 3.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து. 2014இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட 0.7 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்தும் மீட்சியடைந்தது.** இக்காலப்பகுதியில் நிலவிய தூண்டுதலளிக்கும் வானிலை நிலைமைகள், வேளாண்மை நடவடிக்கைகளின் மீட்சிக்கு ஆதரவளித்தது. வளர்ச்சியடைந்து வருகின்ற அரிசி, கடல் மீன்பிடி மற்றும் கடல் நீரியல் மீன்வள நடவடிக்கைகள் இம்மீட்சிக்குப் பெருமளவிற்குப் பங்களித்தன. அதேவேளை, ஏனைய நீண்ட காலப் பயிர்கள், ஏனைய தானியங்கள், சமயலெண்ணெய் தயாரிப்பதற்கான பழங்கள் மற்றும் பழங்களின் பகுதிகள், ஏனைய குடிபான பயிர்கள் மற்றும் காடாக்கம் மற்றும் மரக்குற்றிகளைத் தயாரிக்கின்ற நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்தன. எனினும், தேயிலை, இறப்பர் மற்றும் வாசனைப் பொருட்கள் நறுமணப் பொருட்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள் மற்றும் நன்னீர் மீன்பிடி என்பனவற்றின் வளர்ச்சியில் பதிவு செய்யப்பட்ட சுருக்கம் வேளாண்மையுடன் தொடர்பான நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியைத் தளர்வுறச் செய்தன.

[1] மீள்தளப்படுத்துகின்ற நடைமுறையின் கீழ், மொ.உ.உ.உற்பத்தியைத் திரட்டுதல் தொடர்பில் முறையியல் சார்ந்த மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதி அடிப்படை விலைகளைப் பயன்படுத்தித் திரட்டப்பட்டது. எனவே, மொ.உ.உற்பத்தியை சந்தை விலைகளில் பெறும் பொருட்டு உற்பத்திகள் மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகள் கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதியில் சேர்க்கப்படுகின்றன. பரிசீலனைக்குரிய தொடர்பான காலப்பகுதியில் உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகள் 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு வழங்கப்பட்ட உதவுதொகைகளுடன் ஒப்பிடுகையில் உற்பத்திகள் மீதான வரிகளிலிருந்து கிடைத்த உயர்ந்த பங்களிப்பே காரணமாகும்.

**அட்டவணை 2.1 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் சுட்டெண் புள்ளிகள் (2007-2010=100)**

| விடயம் | 2014 முதலரை (அ) | 2015 முதலரை (ஆ) | மாற்ற வீதம் (%) |
|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் மீன்பிடி** | **130.6** | **139.2** | **6.6** |
| **1 வேளாண்மை** | **125.5** | **136.2** | **8.6** |
| தேயிலை | 111.4 | 110.8 | -0.6 |
| இறப்பர் | 90.9 | 75.1 | -17.4 |
| தெங்கு | 100.7 | 105.9 | 5.2 |
| நெல் | 119.6 | 153.9 | 28.7 |
| ஏனைய பயிர்கள் | 153.9 | 160.4 | 4.2 |
| விலங்கு வளர்ப்பு | 145.6 | 158.5 | 8.9 |
| **2 மீன்பிடி** | **155.1** | **153.5** | **-1.1** |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2.2 நெல் உற்பத்தி**




## உற்பத்திப் போக்கும் நிறுவன ரீதியான ஆதரவும்: வேளாண்மை

### வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

- **வேளாண்மை மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் வெளியீட்டினை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் 2015இன் முதலரைப்பகுதியில் 6.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** சாதகமான வானிலை நிலைமைகளின் நன்மை காரணமாக நெல் துணைத் துறை 28.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. விலங்கு வளர்ப்பும் ஏனைய பயிற்சித் துணைத் துறைகளும் ஒட்டுமொத்த வேளாண்மை வெளியீட்டிற்குச் சாதகமான முறையில் பங்களித்ததுடன் முறையே 8.9 சதவீதம் மற்றும் 4.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், இறப்பர் துணைத் துறை 17.4 சதவீதம் கொண்ட முனைப்பானதொரு வீழ்ச்சியை எடுத்துக்காட்டியமைக்கு உலகளாவிய சந்தையில் காணப்பட்ட தாழ்ந்த விலைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் பாலெடுக்கும் தொழிற்பாடுகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, தெங்குத் துணைத் துறை 5.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் தோன்றுகின்ற துறை 2015இன் முதலரைப்பகுதியில் 0.6 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மேலும், மீன்பிடித் துணைத் துறையும் 2015இன் முதலரைப்பகுதியில் 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு நன்னீர் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே காரணமாகும்.

### நெல்

- **2015இல் நெல் உற்பத்தி 41 சதவீதத்தினால் 4.8 மில்லியன் மெ.தொன்னுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** இவ்வாண்டில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு, 2014/15 பெரும்போகத்தில் உற்பத்தி 28.7 சதவீதத்தினால் 2.9 மில்லியன் மெ.தொன்னுக்கு அதிகரித்தமையினதும் 2015 சிறுபோகத்தில் மதிப்பிடப்பட்ட அதிகரிப்பு ஏறத்தாழ 65 சதவீதமாக (1.9 மில்லியன் மெ.தொன்) அதிகரித்தமையினதும் இணைந்த விளைவாகும். மொத்த வருடாந்த உற்பத்தியில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறும் பெரும்போகத்தில் பதிவுசெய்யப்பட்ட அபரிமிதமான அறுவடைக்கு மேம்பட்ட நெல் விளைச்சல் காரணமாக இருந்ததுடன் இது சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றினால் தோன்றியதொன்கும். அதேவேளை, நெல்லின் அதிகரித்த உத்தரவாதக் கொள்வனவு விலைகளும் வேளாண்மையாளர்கள் எல்லை நிலங்களை நெற் செய்கைக்கு மாற்றுவதற்குத் தூண்டுதலளித்தன. 2014/15 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட பரப்பு 18.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் கடந்த ஆண்டின் தொடர்பான பருவகாலத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 26.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2014/15 பெரும்போகத்தில் நெற் சந்தைப்படுத்துச் சபை நெல்லின் விலைகள், குறிப்பாக, அறுவடைக் காலப்பகுதியில் உறுதியடைவதற்கு 2013/14 பெரும்போகத்தின் 4,563 மெ.தொன்னுடன் ஒப்பிடுகையில் 153,996 மெ.தொன்னைக் கொள்வனவு செய்தது. மேலும், நெற்சந்தைப்படுத்தும் சபை 2015 சிறுபோகத்தில் ஏறத்தாழ 180,000 மெ.தொன்னைக் கொள்வனவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பிடப்பட்ட வருடாந்த நெல் உற்பத்தி 2.9 மில்லியன் மெ.தொன் அரிசிற்குச் சமனாக இருந்ததுடன் இது நாட்டின் அரிசிக்கான கேள்வியில் ஏறத்தாழ 14 மாதங்களுக்கான கேள்வியை ஈடுசெய்யப் போதுமானதாக இருந்தது.

- **அதிகரித்த பெரும்போக நெல் அறுவடை திறந்த சந்தையில் நெல்லின் விலைகளைக் குறைத்து சில்லறை அரிசி விலைகள் குறைவடைய வழிவகுத்தது.** சம்பா மற்றும் நாடு என்பனவற்றின் சராசரி சில்லறை விலைகள் 2015இன் முதற் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டாம் காலாண்டில் ஏறத்தாழ 3 சதவீதத்தினாலும் 9 சதவீதத்தினாலும் முறையே

கிலோகிராமிற்கு ரூ.89.3 இற்கும் ரூ.77.2 இற்கும் வீழ்ச்சியடைந்தது. அதன் விளைவாக அரிசியின் விலைகளை உறுதிப்படுத்துவதற்கும் விவசாயிகளின் வருமானத்தை பாதுகாப்பதற்கும் 2015 மே இலிருந்து கிலோகிராமொன்றிற்கு ரூ.35 கொண்ட இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டமை மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வைக்குப் பதிலாக ஏனைய வரிகள் விதிக்கப்பட்டமை என்பவற்றினூடாக அரசாங்கம் அரிசி இறக்குமதி தீர்வையினை அதிகரித்திருந்தது. அதனைத் தொடர்ந்து 2014 இன் ஏப்பிறலிலிருந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவு செய்த அரிசி இறக்குமதி அளவுகள் 2015 இன் இரண்டாம் காலாண்டில் குறைவடைந்தது.

## தேயிலை

- **2015இன் முதலரைப்பகுதியில் தேயிலை உற்பத்தி 172.6 மில்லியன் கிலோகிராமிற்கு 0.6 சதவீதத்தினால் (ஆண்டுக்கு ஆண்டு) சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** இது தேயிலை விளையும் அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்பட்ட சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக முதலாம் காலாண்டில் தேயிலை உற்பத்தி 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையினதும் இரண்டாம் காலாண்டில் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட 6.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். 2015இன் முதலரைப்பகுதியில், மொத்த தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 85 சதவீதத்திற்கு வகைகூறும் உயர்நிலத் தேயிலை மற்றும் தாழ்நிலைத் தேயிலை இரண்டும் முறையே 1.7 சதவீதத்தினாலும் 1.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. எனினும், மத்திய நிலத் தேயிலை வளரும் முக்கிய பிரதேசங்களில் காணப்பட்ட சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக மத்திய நிலத் தேயிலையின் உற்பத்தி 1.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக தற்பொழுது காணப்படும் பொருளாதார பின்னடைவுகளின் காரணமாக உலகளாவிய சந்தைகளில் தேயிலைக்கான கேள்வி ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எதனையும் காட்டவில்லை.

வரைபடம் 2.3 தேயிலை உற்பத்தி




- **உலகளாவிய சந்தையில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பதிலிறுத்தும் விதத்தில் கொழும்பு தேயிலை ஏலங்களில் தேயிலை விலைகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.** 2015இன் முதலரைப்பகுதியில் சராசரித் தேயிலை விலைகள் கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியினை கிலோகிராமிற்கு ரூ.409.6 இற்கு 14.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கொழும்பு தேயிலை ஏலங்களில் சராசரி தேயிலை விலைகளில் உயர்ந்த வீழ்ச்சி (ஆண்டிற்கு ஆண்டு) தாழ்நிலைத் தேயிலைகளில் (16 சதவீதம்) பதிவுசெய்யப்பட்டதுடன் அதனை அடுத்து நடுத்தர உயரத் தேயிலையிலும் (12.5 சதவீதம்), உயர்நிலத் தேயிலையிலும் (10 சதவீதம்) பதிவு செய்யப்பட்டன. உள்நாட்டுத் தேயிலை விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சிக்கு, தடைகள் விதிக்கப்பட்டமை மற்றும் பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக, ருஷியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான கேள்வி குறைவடைந்தமையின் விளைவாக தேயிலை விலைகளில் காணப்பட்ட பரந்தளவு உலகளாவிய வீழ்ச்சிப்போக்கு ஓரளவு காரணமாவிருக்கும் தேயிலை விலைகளில் காணப்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பச்சைத் தேயிலைக்கு சிறுஉடமையாளர்களினால் பெறப்பட்ட சராசரி விலை 2014இன் முதலரைப்பகுதியின் கிலோகிராமொன்றிற்கான ரூ.70 இலிருந்து 2015இன் முதலரைப்பகுதியில் கிலோ கிராமிற்கு ரூ.60 இற்கு குறைவடைந்தது. அரசாங்கம் சிறு உடமையாளர்களின் பச்சைத் தேயிலை உற்பத்திக்கு உத்தரவாத விலையொன்றினைப் பேணும்பொருட்டு பச்சைத்தேயிலை உதவுதொகைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. இதன்படி, 2015 மாச்சிலிருந்து இது உடமையாளர்களினால் நிரம்பல் செய்யப்பட்ட பச்சைத் தேயிலை கிலோகிராமிற்கு ரூ.80 இனைத் செலுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தேயிலை விலைகளை உறுதியாக்கும் நோக்கில் அரசாங்கமானது இலங்கைத் தேயிலைச் சபை கொழும்புத் தேயிலை ஏலத்திலிருந்து தேயிலையை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1 பில்லியன் நிதியினை வெளியிடுவதற்கான வழிமுறைகளை எடுத்திருந்தது.

## இறப்பர்

- **2015இன் முதலரைப்பகுதியில் இறப்பர் உற்பத்தி 50,394 மெ.தொன்னுக்கு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் இறப்பரின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமையினைத்**

**தொடர்ந்து பாலெடுக்கும் நாட்கள் குறைவடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும்.** இரண்டாம் காலாண்டின் நிலவிய சாதகமற்ற வானிலைநிலைமைகளும் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியைப் பாதித்தன. இதன் காரணமாக சிறுஉடமையாளர் அவர்களின் பாலெடுக்கும் தொழிற்பாடுகளைக் குறைத்துக் கொண்டனர். 2015 முதலரைப்பகுதியில், கிறேப் இறப்பர் உற்பத்தி 6,108 மெ.தொன்னுக்கு 36.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தட்டை இறப்பர் உற்பத்தி 25,305 மெ.தொன்னுக்கு 19.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2015இன் முதலரைப்பகுதியில் மொத்த இறப்பர் உற்பத்தியில் 40 சதவீதத்திற்கு வகைகூறும் குறித்துரைக்கப்படாத வகையின் உற்பத்தி கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் 19,776 மெ.தொன்னிலிருந்து 18,981 மெ.தொன்னுக்கு ஏறத்தாழ 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உலக இறப்பர் கைத்தொழில் தோற்றப்பாட்டின்படி மொத்த உலக இறப்பர் கேள்வி 2015இல் 1.8 சதவீதத்தினாலும் 2016இல் 4.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2015இன் முதலரைப்பகுதியில் உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிலும் இயற்கை இறப்பர் விலைகள் தொடர்ந்தும் அவற்றின் கீழ்நோக்கிய போக்கினையே கொண்டிருந்தன.** உலகளாவிய சந்தையில் இயற்கை இறப்பர் விலைகளின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு உலகளாவிய கேள்வி வீழ்ச்சியடைந்தமையும் முக்கியமான நுகர்வு நாடுகளில் ஒன்றுசேர்ந்த பாரிய இருப்புக்களுமே பெருமளவிற்குக் காரணமாகும். அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில் கொழும்பு இறப்பர் ஏலங்களில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்படட தட்டை 1 இன் சராசரி விலை கி.கிறாமிற்கு ரூ.252 இற்கு 16.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் லேட்டெக்ஸ் கிறேப் IX 12.9 சதவீதத்தினால் கி.கிறாமொன்றிற்கு ரூ.277 இற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, உலகளாவிய சந்தையில் காணப்பட்ட தாழ்ந்த விலைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் இலங்கை பயிர்ச்செய்கையாளர் அவர்களது பாலெடுக்கம் நாட்களின் எண்ணிக்கையினைக் குறைத்துக் கொண்டனர். மேலும், 2020 அளவில் இறப்பர் உற்பத்தியை 200,000 மெ.தொன்னுக்கு உயர்த்தும் வழிமுறைகள் தொடர்ந்தன. இறப்பர் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, 2015 இற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினூடாக இறப்பர் சிறுஉடமையாளர்களுக்காக அரசாங்கம் உத்தரவாதக் கொள்வனவு விலைத் திட்டமொன்றினை அரசாங்கம் அறிமுகப்படுத்திய வேளையில் தாழ்ந்த சந்தை விலைகளின் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட சிறுஉடமையாளர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இதன்படி, கொழும்பு இறப்பர் ஏலங்களில் ஆர்எஸ்எஸ் இறப்பரின் மாதாந்த சராசரி விலைக்கும் உத்தரவாதக் கொள்வனவு விலைக்குமிடையிலான வேறுபாட்டினை (கிலோகிறாமொன்றிற்கு ரூ.350) 2015 மாச்சிலிருந்து சிறுஉடமையாளர்களுக்குச் செலுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

## தெங்கு

- **2015இன் முதலரைப்பகுதியில் தெங்கு உற்பத்தி ஏறத்தாழ 1,500 மில்லியன் காய்களுக்கு 5.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** 2014இன் பெப்புருவரியிலிருந்து ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் முக்கிய தெங்கு வளரும் பிரதேசங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளின் காலங்கடந்த தாக்கம் 2015இன் முதற் காலாண்டுப் பகுதியில் தெங்கு உற்பத்தியைப் பெருமளவிற்குப் பாதித்தது. எனினும், இரண்டாம் காலாண்டில் உற்பத்தி கடந்த ஆண்டின் தொடர்பான காலாண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் ஏற்பட்ட 6.8 சதவீத வளர்ச்சியுடன் மீண்டும் உத்வேகமடைந்தது. அதேவேளையில், தேங்காய்த் துருவல் உற்பத்தி 16,108 மெ.தொன்னுக்கு 38.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு உடன்காய்கள் வேர்ஜின் தேங்காய் எண்ணெயை பன்னாட்டுச் சந்தையில் உயர் கேள்வியைக் கொண்ட தேங்காய் பாலையும் உற்பத்தி செய்யப்படுத்தப்படுவதே முக்கிய காரணமாகும். எனினும், ஆண்டின் முதற் காலாண்டில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேர்ஜின் தேங்காய் எண்ணெய் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் மெதுவடைந்தமைக்கு பன்னாட்டுத் தர நிர்ணயச் சான்றிதழ் நடைமுறையைப் பின்பற்றுவதற்காக ஆலைகள் மூடப்பட்டமையே பெருமளவு காரணமாகும். மேலும், உலகளாவிய சந்தையில் குறைவடைந்த விலைகளும் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் வேர்ஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்தி குறைவடையப் பங்களித்தது. 2015இன் முதலரைப்பகுதியில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஏறத்தாழ 27,167 மெ.தொன்னுக்கு 16.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் தெங்கு களி, பால்மா மற்றும் திரவ தேங்காய்ப் பால் உற்பத்தி என்பனவும் 14,010 மெ.தொன்னுக்கு 14 சதவீதத்தினால் அதிகரித்தது. பன்னாட்டுச் சந்தையில் செவ்விளநீர் மற்றும் இளநீரும் பெருமளவு கேள்வி காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. 2015இன் முதலரைப்பகுதியில் செவ்விளநீரின் ஏற்றுமதிகள் கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 1,027 மெ.தொன்னிலிருந்த 1,820 மெ.தொன்னுக்கு 77 சதவீதத்தினால் அதிகரித்தது. இது பன்னாட்டுச் சந்தையில் செவ்விளநீர் மற்றும் தெங்கு தண்ணீர் போன்றவற்றுக்கான அதிகரித்த கேள்வியை காட்டியிருந்தது.

- **தேங்காய் மற்றும் தேங்காய் அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகள் கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உயர்வாக இருந்தமைக்கு பதனிடப்படாத தேங்காய்களுக்கு தோற்றம்பெற்றுவரும் கைத்தொழில் கேள்விகள் தூண்டுதலாக அமைந்தன.** 2015இன் முதலரைப்பகுதியில் உடன் தேய்காயின் சராசரி சில்லறை விலைகள் கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.46 உடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ரூ. 53 ஆகக் காணப்பட்டது. எனினும், 2015 யூனில் உடன் தேங்காயின் விலைகள் காயொன்றிற்கு ரூ.42 இற்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தமை தேங்காய்த் துருவல் மற்றும் வேர்ஜின் தேங்காய் எண்ணெய் என்பனவற்றிற்கான கேள்வி குறைவடைந்தமையே காரணமாகும். அதேவேளை முதலரைப்பகுதியில் தேங்காயெண்ணெயின் சராசரி விலைகள், கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட லீற்றர் ஒன்றிற்கான ரூ.289.7 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூ.281.7 இற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் அதிகரித்த தாவர எண்ணெயின் இறக்குமதிகளுமே காரணங்களாக அமைந்தன. மேலும், கொழும்பு தெங்கு ஏலங்களில் தேங்காய்த் துருவலின் சராசரி விலை 2014 இன் தொடர்பான காலப்பகுதியின் கிலோ ஒன்றிற்கான ரூ.294.8 இலிருந்து ரூ. 327.2 இற்கு 11 சதவீதத்தால் அதிகரித்தது. பன்னாட்டுச் சந்தையில் தேங்காய்த் துருவலின் சராசரி ஏற்றுமதி விலைகள் 2014இன் கிலோகிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.1 இலிருந்து 2015 இன் முதலரைப் பகுதியில் கிலோகிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.8 இற்கு அதிகரித்தது. அதேவேளை, உள்ளூர் கைத்தொழில்களுக்கு உடன்காய்களின் கிடைப்பனவினை அதிகரிப்பதற்காகவும் உள்ளூர் தேங்காய்களின் விலை அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் உடன் காய் ஏற்றுமதிகள் மீதான கட்டுப்பாடுகளை இவ்வாண்டு காலத்தில் உள்நாட்டு தேங்காய் நிரம்பல் மேம்படுத்துவதனை பரிசீலனையில் கொண்டு 2015 யூன் 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நீக்கப்பட்டது. மேலும், உள்நாட்டு தேங்காய் எண்ணெய் கைத்தொழிலுக்கு பாதுகாப்பளிக்கும் பொருட்டு தாவர எண்ணெய் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2015 யூன் 18 இலிருந்து கி.கிறாமிற்கு ரூ.90 இலிருந்த கிலோகிறாமிற்கு ரூ.105 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், தாவர எண்ணெய் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2015 யூலை 21 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கிலோகிறாமிற்கு ரூ.90 இற்குக் குறைக்கப்பட்டது.

### ஏனைய களப் பயிர்கள்

- **பாரிய மழை மற்றும் வெள்ளம் காரணமாக 2015இன் தொடக்கப்பகுதியில் பெருமளவு பயிரிழப்புக்கள் பதிவுசெய்யப்பட்ட போதும் 2014/15 பெரும்போகத்தில் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி 655,615 மெ.தொன்னுக்கு 1 சதவீதத்தினால் சிறிதளவினால் அதிகரித்தது.** பெரிய வெங்காயம், மிளகாய், தட்டைப் பயறு, பயறு, குரக்கன் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களின் உற்பத்தி 2014/15 பெரும்போகத்தில் அதிகரித்தமைக்கு, அத்தகைய பண்டங்களின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வைகளின் உயர்ந்த மட்டம் காரணமாக தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்கள் இலாபம்தரும் விலைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை ஆதரவளித்தது. அதேவேளை, சோள உற்பத்தி 2015இல் 276,349 மெ.தொன்னுக்கு ஏறத்தாழ 15 சதவீதத்தினால் அதிகரித்தது. இது சோளத்திற்கான மதிப்பிடப்பட்ட ஆண்டுத் தேவைப்பாட்டுடன் (181,872 மெ.தொன்) ஒப்பிடுகையில் மிகையானதொரு உற்பத்தியாகும். மேலும், நிலக்கடலை மற்றும் தட்டைப் பயறின் உற்பத்தியும் 2015இல் நாட்டிற்கான கேள்வியை விஞ்சிக் காணப்பட்டன. அதேவேளை உழுந்து, சின்ன வெங்காயம் மற்றும் எள்ளு என்பனவற்றின் உற்பத்தி ஆண்டிற்கான மொத்த உள்நாட்டுத் தேவையை ஏறத்தாழ 80 சதவீதத்தினைப் பூர்த்தி செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தெரிந்தெடுக்கப்பட்ட ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை பதிவுசெய்தமைக்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவு நிலம் பயிரிடப்பட்டமையே பகுதியளவில் காரணமாக இருந்தது. இதனைப் பொறுத்தவரை, பருவகாலமல்லா உற்பத்திகளை ஊக்குவித்தல், களஞ்சியப்படுத்தல் இயலளவை விரிவாக்குதல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள் மற்றும் விதை உற்பத்தி என்பன மீதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் என்பன இந்நடைமுறைப் பின்னணியில் முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை அம்சங்களாகும்.

### காய்கறிகள்

- **2014/15 பெரும்போகத்தில் காய்கறிகளின் உற்பத்திகள் 744,683 மெ.தொன்னிற்கு 2.3 சதவீதத்தினால் அதிகரித்தன.** கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் காணப்பட்ட வானிலையுடன் தொடர்பான பின்னடைவுகள் பயிர்களைச் சேதப்படுத்தியதுடன் இதன் காரணமாக சந்தை நிரம்பல் குறைவடைந்து ஆண்டின் ஆரம்பக்காலத்தில் காய்கறிகளின் விலைகள் உயர்வடைந்தன. மேலும், வானிலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பயிர்கள் மீளப்பயிரிட்டமையின் காரணமாக பெரும்போக பயிர்ச்செய்கை தாமதடைந்தது. எனினும், மாச்சு மாதத்தில் காய்கறிகளின் அதிகரித்த நிரம்பல் காய்கறிகளின் விலைகள் மீதான அழுத்தத்தினைக் கட்டுப்படுத்த உதவியது. அதேவேளை, மேயிலிருந்து யூன் வரை நடுப்பகுதி வரை காய்கறிகளின் சந்தை நிரம்பல் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக காய்கறிகளின் விலைகள் அதிகரித்தன. எனினும்,

சிறுபோக அறுவடை யூலை நடுப்பகுதியில் சந்தையை அடைந்தமையின் மூலம் காய்கறிகளின் விலைகள் வீழ்ச்சிடைய உதவின.

### சீனி

- **2015இன் முதலரைப்பகுதியில் சீனி உற்பத்தி 11,231 மெ.தொன்னிற்கு 8.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இது பெல்வத்தை சீனித் தொழிற்சாலையின் உற்பத்தி 16 சதவீதத்தினால் அதிகரித்தமையினாலும் கரும்பு பயிரிடலைப் பாதித்த கடுமையான வரட்சி நிலைமைகளின் காரணமாக செவனகல மற்றும் கல்லோயா சீனித் தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையே 0.1 சதவீதத்தினாலும் 0.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையினாலும் இணைந்த விளைவாகும். எனினும், கரும்பின் உற்பத்தியை உயர்த்தும் நோக்குடன் அரசாங்கம் கரும்பின் கொள்விலையினை மெ.தொன்னுக்கு ரூ.4,100 இலிருந்து மெ.தொன்னுக்கு ரூ.4,500 இற்கு அதிகரித்தது. அதிகரிக்கப்பட்ட கொள்வனவு விலையைக் கருத்திற்கொள்கையில் மொத்த சீனி உற்பத்தி 2015இல் 60,000 மெ.தொன்னுக்கு 15 சதவீதத்தினால் அதிகரிக்கும். இது நாட்டின் மொத்த சீனித் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 10 சதவீதத்திற்குச் சமமானதாகும்.

### மீன்பிடி

- **2015இன் முதலரைப்பகுதியில் மீன் உற்பத்தி 256,000 மெ.தொன்னிற்கு 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு நன்னீர் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.** நன்னீர் மீன்பிடி மற்றும் கூனி இறால் பண்ணை உற்பத்தி முறையே 25 சதவீதத்தினாலும் 36 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்த வேளையில் நீரியல் மூலவளங்கள் 44 சதவீதத்தினால் அதிகரித்தன. நன்னீர் மீன் உற்பத்தி குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2015இன் தொடக்கப்பகுதியில் நிலவிய மோசமான வானிலைநிலைமைகள் காரணங்களாக விளங்கின. தொடர்ச்சியான மழையின் காரணமாக முக்கிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்தமையானது மீன்பிடிக்கத்தக்க பிரதேசங்களைக் குறைத்ததன் மூலம் மீன் உற்பத்தி குறைவடைய வழிவகுத்தது. மேலும், 2014இல் நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சுகளை விடுவதில் ஏற்பட்ட குறைப்பும் உற்பத்தி குறைவடையப் பங்களித்தன. எனினும், ஆண்டின் பின்னரைப்பகுதியில் பருவகால நீர்த்தேக்க மீன் உற்பத்தியுடன் நன்னீர் மீன்பிடி அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, இக்காலப்பகுதியில் கடல் மீன் உற்பத்தி 3 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. கடல் மீன் உற்பத்தியின் அதிகரிப்பிற்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் 4.6 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்த ஆழ்கடல் மீன்பிடியின் அதிகரிப்பே பெருமளவு காரணமாகும். அதேநேரம் சட்டத்திற்கு மாறான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடி தொடர்பான கரிசனைகளின் அடிப்படையில், இலங்கையின் கடலுணவு ஏற்றுமதிகளின் முக்கிய சந்தையாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் மீன்தடையினை இல்லாமல் செய்யும் நோக்குடன் கப்பல் கண்காணிப்பு முறைமையொன்றினை உருவாக்குவதற்கு அரசாங்கம் பல்வேறு கொள்கை வழிமுறைகளையும் மேற்கொண்டது. 2015இன் முதலரைப்பகுதியில் மீன்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் மாற்றுத் தொட்டிகள் இணைக்கப்பட்ட ஏறத்தாழ 570 பல நாள் படகுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. பல நாள் படகுகளில் மீன்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் மாற்றுத் தொட்டிகள் போன்ற இன்றியமையாத சாதனங்களைப் பொருத்துகின்ற செலவுக் கொடுப்பனவுத் திட்டத்தினூடாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. கப்பல் கண்காணிப்பு முறைமையின் அறிமுகம் பன்னாட்டு நியமங்களையும் ஆழ்கடல் மீன்பிடிக்கு பிரயோகிக்கத்தக்க இணங்குவிப்பதனையும் வலுப்படுத்த உதவும் அதேவேளை சட்டத்திற்கு மாறான, அறிக்கையிடப்படாத ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடிகளையும் ஒழித்துவிடும். அதேவேளை, 2015இன் முதலரைப்பகுதியில் நாட்டின் மீன்பிடிப் படகுத் தொகைகளை வலுப்படுத்தும் பொருட்டு வெளிஇயந்திரங்கள் இணைக்கப்பட்ட ஏறத்தாழ 39 படகுகளும் 85 பல நாள் படகுகளும் சேர்க்கப்பட்டன. மேலும், நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வள உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன் ஆண்டின் முதலரைப்பகுதியில் மீன்பிடி அமைச்சு உணவு மற்றும் வேளாண்மை அமைச்சின் ஒத்துழைப்புடன் மீன்குஞ்சு மற்றும் நன்னீர் இறால் முட்டை இருப்புக்களை வைத்திருத்தல், சனசமூகப் பங்கேற்புடன் நீர் நிலையங்களைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட சிறிய மீன்குஞ்சு பொரிக்குமிடங்கள் நிறுவியமை என்பன உட்பட பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

### விலங்கு வளர்ப்பு

- **2015இன் முதலரைப்பகுதியில் பால் உற்பத்தி, கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியை விட 4 சதவீதத்தினால் 213 மில்லியன் லீற்றர்களுக்கு அதிரித்தது.** மெதுவான வளர்ச்சிக்கு கடந்த ஆண்டில் நிலவிய கால் மற்றும் வாய் நோய் தொற்று நோயின் நீண்ட காலத் தாக்கம் காரணமாக அமைந்தது. அதேவேளை, 2015இன் முதலரைப்பகுதியில் பாரியளவு பால் உற்பத்தி தயாரிப்பாளர்களின் மொத்தப் பால் சேகரிப்பு 128.9 மில்லியன் லீற்றருக்கு 30 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இம்முன்னேற்றத்திற்கு குறிப்பாக, மில்கோவின் பொலனறுவ, திகன மற்றும் அம்பேவல பால் தொழிற்சாலைகளில் நவீனமயப்படுத்தல்கள் முன்னேற்றம்

கண்டமையே காரணமாகும். மேலும், தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் நிடியகம பாற்பண்ணை யூலை மாதத்தில் அவுத்திரேலியாவிலிருந்து சுத்தமான கலப்பான பசுவினை முதலில் பெற்றுக்கொண்டதுடன் இதன் இயலளவினை விரிவாக்குவதற்கும் நவீன பாற்பண்ணையாக மாற்றியமைப்பதற்கும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு தீவிரமான முகாமைத்துவ முறைமையின் கீழ் ஐரோப்பிய வகை கால்நடைகளைப் பேணி வளர்க்கமுடியும். தற்போதைய நிலைமையினைக் கவனத்தில் கொள்கையில் 2015இல் பால் உற்பத்தி 2 சதவீதத்தினால் 426 மில்லியன் லீற்றர்களுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது மொத்த உள்நாட்டுக் கேள்வியில் ஏறத்தாழ 56 சதவீதத்தினைப் பூர்த்திசெய்யப் போதுமானதாகும். அதேவேளை, 2015இன் முதலரைப் பகுதியில் முட்டை உற்பத்தி 1,170 மில்லியனுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் கோழி இறைச்சி உற்பத்தி 13 சதவீதத்தினால் 80,750 மெ.தொன்னுக்கு அதிகரித்தது. மேலும், 2015இன் முதலரைப்பகுதியில் இறைச்சிகான பேரன் சிக் உற்பத்தி ஏறத்தாழ 22 சதவீதம் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது கோழி இறைச்சி உற்பத்தியின் அதிகரிப்பிற்குப் பெருமளவிற்குப் பங்களித்தது.

## கைத்தொழில்

- **2015இன் முதலரைப்பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் கைத்தொழிலுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் 2014இன் முதலரைப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 4.5 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 1.3 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது.** கைத்தொழிலுடன் தொடர்பான நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சி தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சியுடன் பரந்தளவிற்கு இசைந்து செல்வதாகக் காணப்பட்டது. மேலும், இரண்டாம் காலாண்டுப்பகுதியில் கட்டுமான நடவடிக்கைகளில் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் மீட்சியடைந்தமையினை எடுத்துக்காட்டியதன் மூலம் ஆண்டின் முதற் காலாண்டின் கட்டுமான நடவடிக்கைகளில் காணப்பட்ட எதிர்மாறான வளர்ச்சியை ஓரளவு எதிரீடு செய்தன. மின்வலு வழங்கல் நடவடிக்கைகள், வடிகால்கள், கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் குட்டையை அகற்றும் நடவடிக்கைகளுடன் இக்காலப்பகுதியில் 2014இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வளர்ச்சியைப் பேணின. நீர்ச் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகளும் சாதகமான முறையில் பங்களிக்காதவெனினும் 2014இன் முதலரைப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இது மெதுவான வேகத்தில் காணப்பட்டது. எனினும், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் சுருக்கமடைந்து கைத்தொழிலுடன் தொடர்பான வளர்ச்சியைப் பாதித்தது.

- **ஆண்டின் முதலரைப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகள் உயர்வடைந்து கைத்தொழிலுடன் தொடர்பான வளர்ச்சியில் பங்களித்த வேளையில் கட்டுமாணம் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் ஆண்டின் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் பின்னடைவினைக் கொண்டிருந்தன.** கைத்தொழில் நடவடிக்கைகளில் பெரும் பிரிவான தயாரிப்பு நடவடிக்கைகள் இக்காலப்பகுதியில் 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மந்தமான செயலாற்றத்திலிருந்து மீட்சியடைந்தது. இவ்வளர்ச்சிக்கு தயாரிப்பு நடவடிக்கைகளின் முக்கிய துணை வகையான உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு மீளாய்விற்குரிய காலப்பகுதியில் 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமை முக்கிய காரணமாக விளங்கியதுடன் இது 2014இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.4 சதவீதம் கொண்ட சுருக்கத் தாக்கத்திலிருந்தும் மீட்சியடைந்தது. அதேவேளை, இக்காலப்பகுதியில் வடிகால்கள், கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட 9.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 22.4 சதவீதத்தினால் தொடர்ந்தும் விரிவடைந்தது. 2015இன் முதலரைப்பகுதியில் மின்வலு வழங்கலுடன் தொடர்ந்த நடவடிக்கைகள் மற்றும் நீர்ச் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் என்பன 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே 0.3 சதவீதத்துடனும் 5.7 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் முறையே 4.1 சதவீதமாகவும் 3.2 சதவீதமாகவும் காணப்பட்டன. எனினும், கைத்தொழில் நடவடிக்கைகளில் இரண்டாவது மிகப்பெரும் பிரிவான கட்டுமான நடவடிக்கைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 15.1 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 5.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு ஆண்டின் இரண்டாம் காலாண்டுப்பகுதியின் சாதகமான வளர்ச்சியே காரணமாகும். மேலும், இக்காலப்பகுதியில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் 2014இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்து கைத்தொழில் வளர்ச்சியை தளர்வுறச் செய்தன.

## உற்பத்திப் போக்கும் நிறுவன ரீதியான உதவியும்: கைத்தொழில்

- **கைத்தொழில் நடவடிக்கைகள் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு, மின்வலு, வாயு மற்றும் நீர் மற்றும் கட்டுமானத் துணைத் துறைகளை உள்ளடக்கியிருக்கிறது.** இவற்றிடையே, தயாரிப்பு நடவடிக்கைகள் மொத்த கைத்தொழில் நடவடிக்கைகளில் 54 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறி கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு

உயர்ந்த பங்களிப்பினை வழங்கியது. 17 முக்கிய நடவடிக்கைகளை உள்ளடக்கி, பன்னாட்டு நியமக் கைத்தொழில் பகுப்பாய்வின் திருத்தம் 4இனைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் பொருளாதாரத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளின் செயலாற்றத்தினை அளவிடுகிறது.[2]

## தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

- **கைத்தொழில் வெளியீட்டின் முன்னணிக் குறிகாட்டியான தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2015இன் முதலரைப் பகுதியில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 10.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டியது.** அணியும் ஆடைகள் குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள், இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்தி மற்றும் ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் என்பன இக்காலப்பகுதியில் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீட்டிற்குச் சாதகமான முறையில் பங்களித்தன. எனினும், 2015இன் முதலரைப்பகுதியில் புடவைகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், தோல் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத் துறைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதிக்கெதிராக வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

- **2014 யூலையிலிருந்து சாதகமான செயலாற்றத்தினைக் காட்டிய தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் முக்கிய துணைத் துறையிலான உணவு உற்பத்தித் துணைத் துறை 2015இன் முதலரைப்பகுதியிலும் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தெரிந்தது.** 2015இன் காலாண்டில் உணவு உற்பத்திகள் துணைத் துறை 4.3 சதவீத வளர்ச்சியைக் காட்டியதுடன் 2015இன் இரண்டாம் காலாண்டில் 0.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் காட்டியதன் மூலம் 2015இன் முதலரைப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2.4 சதவீதத்தினைப் பதிவு செய்தது. இதற்கு, வெதுப்பக உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் கறிவகைகள், மக்ரோணி, நூடில்ஸ் மற்றும் அதையொத்த உற்பத்திகளின் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் தயாரிக்கப்பட்ட விலங்குத்தீன என்பனவற்றுடன் சேர்ந்து கொண்டு ஆதரவளித்தமையே காரணமாகும். எனினும், மீனின் பதனிடல் மற்றும் அதனைப் பாதுகாத்துப் பேணுதல் நடவடிக்கைகள் 1.2 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டின.

2 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலுள்ள நிறைகள் 2010இனை அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்தி ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் வழங்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அமைப்பியல் மாற்றங்கள் காணப்படுவதனால் அவை ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த நிறைகளுடன் புதிய கைத்தொழில்களைத் தோற்றுவித்திருக்கின்ற வேளையில் மாதிரியிலுள்ள ஏற்கனவேயுள்ள சில கைத்தொழில்களின் முக்கியத்துவம் குறைவடைந்திருக்கிறது. தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிற்கான அடுத்த திருத்தத்தின் போது இவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

வரைபடம் 2.4 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இதற்கு மோசமான வானிலைநிலைமைகளின் விளைவாக நன்னீர் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக இருக்கும். சீனித் தயாரிப்பு 66.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, மோசமான வானிலைநிலைமைகளினால் செவனகல தொழிற்சாலை உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்குரிய முக்கிய காரணமாகும். அதேவேளை 2015இன் வரவு செலவுத்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் காய்கறிகள் மற்றும் உணவு பதனிடல் வியாபாரத்தினைத் தொடங்கியுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு 50 சதவீத வரிக் குறைப்பினை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கை அரசாங்கம் எடுத்தது. இது எதிர்காலத்தில் உணவுக் கைத்தொழில் மேலும் விரிவடைய உதவும்.

- **2015இன் முதலரைப்பகுதியில் குடிபானத் துணைத் துறை 13.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியைக் காட்டியது.** குடிபானத் துணைத் துறையில் பாரிய துணைத் துறையான குடிவகையின் உற்பத்தி வளர்ச்சி குறிப்பிடத்தக்களவிற்கு 12.9 சதவீதமாக விளங்கி இச்செயலாற்றத்திற்கு முக்கியமான பங்களிப்பாளராக விளங்கியது. இதேபோன்று மென்குடிபானங்கள், கனிமநீர் மற்றும் போத்தலிலடைக்கப்பட்ட தண்ணீர் என்பனவற்றின் தயாரிப்பு 19.9 சதவீதத்தினால் உயர்வடைந்து குடிபானத் துணைத் துறையின் விரிவாக்கத்திற்கு மேலும் உதவியது. எனினும், தேறல் செய்யப்பட்ட பால் உற்பத்தி உட்பட தேறல் செய்யப்பட்ட குடிபானங்களின் தயாரிப்பு பின்னடைவினைக் காட்டி 0.4 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இக்காலப்பகுதியில் சுற்றுலாத் துறையிலிருந்தான அதிகரித்த கேள்வி உணவு அதேபோன்று குடிபானத் துணைத் துறைகளின் விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தது.

- **தொழில்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலுள்ள முன்னணித் துணைத் துறையான அணியும் ஆடைகள் துணைத் துறை 2015இல் மிக ஆரோக்கியமான வீதத்தில் செயலாற்றியது.** 2015இன் முதலரைப்பகுதியில் துணைத் துறை 22.6 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்தது. ஒழுக்கம் சார்ந்த வேலைபுரிகின்ற நிலைமைகளின் கோட்பாடுகளின் கீழ் நம்பகமானதும் தரம்மிக்கதுமான ஆடைத் தயாரிப்பாளர்கள் என்ற இலங்கைக்குரிய பன்னாட்டு புகழ்வாய்ந்ததன்மை, சுற்றாடல் சார்ந்த சிநேகபூர்வ பசுமை தயாரிப்பு மற்றும் தகுதிவாய்ந்ததும் கல்வி அறிவுமிக்கதுமான தொழிற்படை என்பன பன்னாட்டுச் சந்தையில் போட்டித்தன்மையுடன் கைத்தொழில் தொடர்ந்தும் விளங்க ஆதரவளித்தன.

- **2015இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறை 5.3 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு வளமாக்கி, தீந்தைகள் மற்றும் வார்னிசுகள், சவர்க்காரம் மற்றும் அழுக்கு நீக்கிகள் போன்ற கைத்தொழில்களுடன் தொடர்பான அதிகரித்த வெளியீடுகளிலிருந்தும் நன்மைகளைப் பெற்றுக்கொண்டது.** இரசாயன மற்றும் இரசாய உற்பத்திகள் துணைத் துறையில் முன்னணி வெளியீடாக விளங்கும் வளமாக்கி உற்பத்தி 2015இன் முதலரைப்பகுதியில் 0.9 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும் தீந்தைகள் மற்றும் வார்னிசுகளின் உற்பத்தி 2015இன் முதலரைப்பகுதியில் 27.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தினைக் காட்டியது.

- **2015 இன் முதலரைப்பகுதியில் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் துணைத் துறை நல்ல முறையில் செயலாற்றியது.** 2015இன் முதற்காலாண்டில் 5.3 சதவீதம் கொண்ட மெதுவான ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியை உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளின் வெளியீடு பிரதிபலித்தமைக்கு குறைந்தமட்ட கட்டுமான நடவடிக்கைகள் பெருமளவிற்குக் காரணமாக இருந்ததுடன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் 22.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தமையின் மூலம் மேம்பட்ட செயலாற்றம் பதிவுசெய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் 13.0 சதவீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சி எய்தப்பட்டது. இது துணைத் துறையின் வெளியீட்டில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறும் சிமெந்து, சுண்ணாம்பு மற்றும் பிளாஸ்டர் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்திகள் 29.8 சதவீதத்தினால் அதிகரித்து சிமெந்துக் கலவைப்பொருட்களின் உற்பத்தியுடன் சேர்ந்து ஆண்டின் ஆண்டு அடிப்படையில் 16.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், களிமண் ஓடுகள் போன்ற களிமண் கட்டட மூலப்பொருட்களின் தயாரிப்பும் செயலாற்றத்தில் வீழ்ச்சியைப் பிரதிபலித்த 2015இன் முதலரைப் பகுதியில் 12.4 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

- **மேலும், 2015இன் முதலரைப்பகுதியில் புகையிலை உற்பத்திகளின் துணைத் துறையின் வெளியீடு 15.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** தொடர்பான காலப்பகுதியில் அதிகரித்த சம்பளங்களின் விளைவாக செலவிடத்தக்க வருமானம் உயர்வடைந்தமையின் காரணமாக அதிகரித்த கேள்வியும் இத்துறையின் வளர்ச்சிக்கு உதவியது.

- **இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறை இக்காலப்பகுதியில் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** இருப்பினும் கூட இத்துணைத் துறை 2015இன் முதற்காலாண்டில் 2.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்ததெனினும் 2015இன் இரண்டாம் காலாண்டில் 2.8 சதவீதம் கொண்ட நேர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பொதுவாக இத்துணைத் துறை 2014இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2015இன் முதலரைப்பகுதியில் இத்துணைத் துறை 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. இறப்பர் டயர்கள் மற்றும் ரியூப்புக்கள் அதேபோன்று கையுறை, இறப்பர் கலவைகள் போன்ற மற்றைய இறப்பர் உற்பத்திகளின் தாழ்ந்த தயாரிப்பு இக்காலப்பகுதியின் இச்செயலாற்றத்திற்குக் காரணமாயிருந்தது. தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் உள்நாட்டுப் பதனிடப்படாத இறப்பர் உற்பத்தி இச்செயலாற்றத்திற்குக் காரணமாக இருக்கக்கூடும். மேலும், உலக சந்தையில் காணப்பட்ட தாழ்ந்த இறப்பர் விலைகள் இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் உற்பத்திகளை மிக மலிவாக கிடைக்கச்செய்தமையும் டயர் தயாரிப்புக் கைத்தொழிலைப் மிகப் பாதகமாக பாதித்திருக்கிறது. மேலும், ஐக்கிய அமெரிக்கா

**வரைபடம் 2.5 தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் உள்ளடக்கம் - 2015 முதலரை**



போன்ற முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் ஐக்கிய அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படும் சீனாவில் தயாரிக்கப்பட்ட டயர்களின் மீது தேவையற்ற பொருட்களைக் குவிக்கின்றமைக்கெதிராக எதிர்த் தீர்வைகளை விதிப்பதன் காரணமாகவும் இதன் விளைவாகவும் அத்தகைய உற்பத்திகள் இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை நோக்கி உள்நாட்டுச் சந்தைகளின் விலைகளிலும் பார்க்க குறைந்த விலைத் திருப்பப்படுகின்றன.

- **புடவைகள் துணைத் துறையும் 2015இன் முதலரைப்பகுதியில் பலயீனமான செயலாற்றத்தினைக் காட்டி ஏறத்தாழ 4.6 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது.** இக்காலப்பகுதியில் மலிவான விலையில் புடவை மற்றும் புடவைப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமையின் காரணமாக தோன்றிய கடுமையான போட்டியும் உள்நாட்டுப் புடவைத் தயாரிப்பு துணைத் துறையினை மோசமாகப் பாதித்த முக்கிய காரணங்களாக இருக்கக்கூடும். ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற பாரம்பரியச் சந்தைகளுக்குக் குறைந்த செலவில் நிரம்பல் செய்பவர்களிடமிருந்து தோன்றும் கடுமையான போட்டியைக் கருத்திற்கொள்கையில், கைத்தொழில், புதிய ஏற்றுமதிச் சந்தைகளைக் கண்டறிவது பற்றி பரிசீலித்தல் வேண்டும்.

- **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு உற்பத்திகள் முழுவதையும் உள்ளடக்குகின்ற சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் தொழிற்சாலை உற்பத்தி இக்காலப்பகுதியில் எதிர்க்கணியமான செயலாற்றத்தினைக் காட்டியது.** இத்துணைத் துறையானது 2015இன் முதற் காலாண்டில் 39.2 சதவீதமான எதிர்க்ணிய வளர்ச்சியையும் இரண்டாம் காலாண்டில் 5.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியையும் காட்டியது. 2015இன் முதலரைப் பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் துறையின் ஒட்டுமொத்தக் குறைப்பு 2014இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 23.7 சதவீதமாகக் காணப்பட்டது. திருத்தல் மற்றும் பேணல் வேலைகளுக்காக தூய்மி மூடப்பட்டதன் காரணமாக சுத்திகரிப்புச் செயன்முறை குறைவடைந்தமையின் விளைவாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளில் சுருக்கம் ஏற்பட்டது.

- **2015இன் முதற் காலாண்டுப் பகுதியில் 0.6 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பிரதிபலித்த அடிப்படை உலோக உற்பத்திகளின் வெளியீடு 2015இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் 5.5 சதவீதத்தில் வீழ்ச்சியடைந்தமையானது 2015இன் முதலரைப்பகுதியில் 2.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.** அடிப்படை இரும்பு மற்றும் உருக்கு உற்பத்திகளின் தயாரிப்பில் ஏற்பட்ட சுருக்கம் இச்செயலாற்றத்தினைப் பாதித்த முக்கிய காரணிகளாகும். மேலும், காலணியுடன் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பில் காணப்பட்ட வீழ்ச்சி 2015இன் முதலரைப் பகுதியில் தோல் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள் துணைத் துறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

- **அரசாங்கம், அதன் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களினூடாக கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் வசதியளித்தது.** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, பிரதேசக் கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்தும் பொருட்டு பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தற்பொழுது, 17 மாவட்டங்களையும் 8 மாகாணங்களையும் உள்ளடக்கி 27 கைத்தொழில் பேட்டைகள் காணப்படுவதுடன் அவை 17,347 ஆட்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் வழங்குகின்றன. திருகோணமலை கைத்தொழில் பேட்டை மற்றும் திராய்மடு கைத்தொழில் பேட்டை என்பனவற்றின் கட்டம் II தொடர்பான வேலைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்தன. மேலும், ஆடைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலி ஓயாவிலும் மன்னார் மாவட்டத்தில் முசலியிலும் இரண்டு கைத்தொழில் பேட்டைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

- **நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்திக்கான நிறுவன ரீதியான ஆதரவு 2015 காலப்பகுதியிலும் தொடர்ந்தது.** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையினை வலுப்படுத்தும் நோக்குடன் சிறிய நடுத்த தொழில்முயற்சி அபிவிருத்திக்கான தேசியக் கொள்கைக் கட்டமைப்பினை விருத்தி செய்தது. தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை பிரதேசய செயலாளர் மட்டங்களில் தொடர்ந்தும் பிரதேச தொழில்முயற்சி மன்றங்களை வலுப்படுத்தியதுடன் தற்பொழுது 34 பிரதேச தொழில்முயற்சிகள் மன்றம் காணப்படுகின்றன. மேலும், பிரதேச மட்டங்களில் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் தொழில் முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் நிதியியல் முகாமைத்துவத் தேர்ச்சியை உயர்த்துவதற்காக மகளிர் தொழில்முயற்சியாண்மை, அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், "உபாதிகாரி வயவசக்யாகே உதானய" நிகழ்ச்சித்திட்டம் மொறட்டுவ மரத்தளபாடங்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன. மேலும், தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் வியாபார அபிவிருத்திப்

பணிகளை வழங்குவோருக்குமிடையில் பிரதேச மற்றும் தேசிய மட்டங்களில் இணைப்புக்களையும் ஒருவருடன் ஒருவருக்கான தொடர்புகளையும் உருவாக்கும் பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் வியாபார அபிவிருத்திப் பணிகளை நடத்துவதற்குத் திட்டமிட்டு வருகின்றது.

## பணிகள்

- **2015இன் முதலரைப்பகுதியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பாளராக விளங்கிய பணிகளுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள், 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன.** இவ்வளர்ச்சிக்கு வீடுகளின் சொத்துடமை உள்ளிட்ட நிதியியல், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகளின் கணிசமான விரிவாக்கமே காரணமாகும். மேலும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், பொது நிருவாகப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளும் பணிகளின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்களவில் பங்களித்தன. எனினும், தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தலுடன் தொடர்பான நடவடிக்கைகள் கல்வி மற்றும் தொழில்சார் பணிகள் இக்காலப்பகுதியில் சுருக்கமடைந்த வேளையில் மற்றைய பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் சாதகமான வளர்ச்சியைக் காட்டின.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

- **2015இன் முதலரைப்பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் பணிகள் நடவடிக்கைகளினது பாரிய பிரிவொன்றான மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** 2015இன் முதலரைப்பகுதியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்த 12.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இந்நடவடிக்கைகளில் காணப்பட்ட பொதுவான வளர்ச்சியே முக்கிய காரணமாகும். அதேவேளை, களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து 2014இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.7 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து இதே காலப்பகுதியில் 2.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. மேலும், தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகளும் 2015இன் முதலரைப்பகுதியில் மீட்சியடைந்து 2014இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 3.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 8.6 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மேலும், பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் 2014இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.0 சதவீத சுருக்கத்திற்கெதிராக 20.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

## தகவல் மற்றும் தொடர்பூட்டல்

- **2015இன் முதலரைப்பகுதியில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட 2014இன் முதலரைப்பகுதியில் ஏற்பட்ட 18.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு தொடர்பூட்டல் நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவாக்கம் ஏற்பட்டமையே முக்கிய காரணமாக அமைந்ததுடன் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 22.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதலரைப்பகுதியில் 17.7 சதவீத வளர்ச்சியை அடைந்தது. மேலும், இக்காலப்பகுதியில் நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் ஒளிபரப்பல் நடவடிக்கைகள் மற்றும் செவிப்புல மற்றும் கட்புல தயாரிப்புக்கள் 2014இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 8.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தது. எனினும், ஆண்டின் முதலரைப்பகுதியில் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் தயாரிப்பு ஆலோசனை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2014இன் முதலரைப்பகுதியில் 11.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

## நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

- **2015இன் முதலரைப்பகுதியில் நிதியியல், காப்புறுதி மற்றும் வீடுகளின் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்துக்களின் நடவடிக்கைகள் 2014இன் இதே காலப்பகுதியின் 8.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு வீடுகளின் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்துக்களின் நடவடிக்கைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 1.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 16.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளையில், 2015இன் முதலரைப்பகுதியில் நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் 2014இன் முதலரைப்பகுதியில்

பதிவுசெய்யப்பட்ட 16.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், இக்காலப்பகுதியில் காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியை ஏற்படுத்தின.

### தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள்

- **2015இன் முதலரைப்பகுதியில் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் 2014இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு, இப்பிரிவின் முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் 2014இன் முதலரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட 2.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 11.6 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. எனினும், இக்காலப்பகுதியில் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், அறிவியல், தொழில்நுட்பம், நிருவாகம் மற்றும் ஆதரவுப் பணி நடவடிக்கைகள் 2014இன் முதலரைப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.9 சதவீத வளர்ச்சிக்கெதிராக 11.5 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றினைப் பதிவு செய்தது.

### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள்

- **2015இன் முதலரைப்பகுதியில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிளில் பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 7.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 3.3 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு இக்காலப்பகுதியில் பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் கணிசமான வளர்ச்சி முக்கிய காரணமாக அமைந்தது. இது 2014இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, மனிதநல நடவடிக்கைகள் வாழிட நலக் கவனிப்பு மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் 2014 முதலரைப்பகுதியில் ஏற்பட்ட 7.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.9 சதவீதத்தினால் சிறிதளவு வளர்ச்சியடைந்தன. எனினும், கல்விப் பணிகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 14.7 சதவீத வளர்ச்சிக்கெதிராக 4.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.

**வரைபடம் 2.6 உள்நாட்டு கேள்வியின் உள்ளடக்கம் - 2015 (அ)**




(அ) நடுத்தரகால பேரண்டப்பொருளாதார சட்டகத்தின் அடிப்படையிலான இலங்கை மத்திய வங்கியின் எறிவுகள்

### செலவினம்

- **2015இல் பெயரளவு நியதிகளில் உள்நாட்டு நுகர்விலிருந்து உருவாக்கப்பட்ட கேள்வி மற்றும் முதலீட்டுச் செலவினம் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுச் செலவு 2014இன் மதிப்பிடப்பட்ட வளர்ச்சியான 6.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.7 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டது.** இதன்படி, மொத்த உள்நாட்டுச் செலவின் பெறுமதி 2014இன் ரூ.11,128 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015இல் ரூ.12,091 பில்லியனாக இருக்குமென எறிவு செய்யப்பட்டது. பொருளாதாரத்தின் முதலீட்டுச் செலவினம் மெதுவாக இருந்தமையினால் இவ்வளர்ச்சிக்கு நுகர்வுச் செலவினமே தூண்டுதலாக விளங்கியிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, மொத்த உள்நாட்டுச் செலவினம் மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி என்பனவற்றின் மொத்த நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2015இன் 5.7 சதவீதம் கொண்ட உண்மை வளர்ச்சி மற்றும் 4.0 சதவீதம் கொண்ட உள்ளடக்க மொ.உ.உற்பத்திச் சுருக்கி என்பனவற்றுடன் ரூ.11,313 பில்லியனுக்கு 9.9 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், பொருளாதாரத்தின் தேறிய வெளிநாட்டுக் கேள்வியின் வளர்ச்சி 2014 உடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் சாதகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது நிலவுகின்ற தாழ்ந்த உலகளாவிய பண்ட விலைகள் குறிப்பாக தாழ்ந்த எண்ணெய் விலைகள் இறக்குமதிச் செலவினத்தினைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வேளையில் ரூபாவின் பெறுமதி இறக்கம் மற்றும் சில பேரண்ட முன்மதியுடைய தன்மை மற்றும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இறை வழிமுறைகள் என்பன இறக்குமதியை ஊக்குவிக்காமல் விடுவதனால் பெயரளவு நியதிகளில் இறக்குமதி வளர்ச்சியை ஊக்கம் குன்றச் செய்தது.

## நுகர்வு

- **2015இல் தனியார் மற்றும் அரச துறை நுகர்வினை உள்ளடக்கிய நுகர்வுச் செலவினம் பெயரளவு நியதிகளில் 2014 இற்காக மதிப்பிடப்பட்ட 6.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.8 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டது.** இவ்வளர்ச்சிக்கு, தனியார் மற்றும் அரச நுகர்வுச் செலவினங்கள் இரண்டிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கமே ஆதரவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **நுகர்வுச் செலவினத்தின் முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் தனியார் நுகர்வு 2014இன் மதிப்பிடப்பட்ட வளர்ச்சியான 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டது.** தனியார் நுகர்வு நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு தாழ்ந்த பணவீக்கச் சூழல் மற்றும் குறிப்பாக அரச துறையில் காணப்பட்ட சம்பள அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக நுகர்வோரின் செலவிடத்தக்க வருமானம் அதிகரித்தமை தூண்டுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் இரண்டிலும் இறக்குமதி வர்த்தகச் சுட்டெண்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்கள், நுகர்வோர் பொருட்கள் மீதான செலவினத்தின் அதிகரித்துச் செல்லும் போக்கினை எடுத்துக்காட்டின.

- **2015ஆம் ஆண்டிற்கான ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், அரச நுகர்வுச் செலவினம் 2014இல் பதிவுசெய்யப்பட்ட 15.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 25.3 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டது.** அரச நுகர்வின் முக்கிய பங்களிப்பாளரான சம்பளம் மற்றும் கூலிகள் மீதான செலவினம், அரசின் மீண்டெழும் செலவினத்தின் பெரும் பங்கினைக் கொண்டிருந்தது. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் அரச துறை ஊழியர்களின் சம்பளங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு அரச நுகர்வினாலே ஏற்பட்ட எறிவு செய்யப்பட்ட அதிகரிப்பில் பெரும் பங்கிற்கு பங்களித்தது. வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 29.3 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏனைய கொள்வனவுகள் மீதான செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் 14.6 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## முதலீடு

- **2015ஆம் ஆண்டுப் பகுதியில் தனியார் மற்றும் அரச முதலீடுகளை உள்ளடக்கிய முதலீட்டுச் செலவினம் 2014 இற்கான மதிப்பிடப்பட்ட வளர்ச்சியான 8.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது.** பொருளாதாரத்தின் முதலீட்டு நடவடிக்கைகளில் காணப்பட்ட எறிவு செய்யப்பட்ட மெதுவான தன்மை அரச முதலீட்டு நடவடிக்கைகளின் சிக்கனப்படுத்தலுடன் இசைந்து செல்வதாகக் காணப்பட்ட வேளையில் தனியார் முதலீடுகள் ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த வட்டி வீதங்கள் மற்றும் மேம்பட்ட வியாபாரச் சூழல் என்பனவற்றுடன் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டின் முதலரைப்பகுதியில், முதலீட்டுச் செலவினத்தில் பெரும் பங்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்டுமான நடவடிக்கைகளில் மெதுவான போக்கொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட கட்டுமான நடவடிக்கைகளில் காணப்பட்ட படிப்படியான வளர்ச்சி ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகச் சுட்டெண்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 2014இன் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட சுருக்கத்திலிருந்தும் மீட்சியடைந்து இவ்வாண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டியது.

- **மொத்த முதலீட்டில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு வகைகூறும் என மதிப்பிடப்பட்ட தனியார் முதலீடுகள் 2015இல் 8 சதவீதத்தினால் அதிகரிக்குமென எறிவு செய்யப்பட்டது.** தனியார் துறை முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் கொள்வனவு/கட்டுமானம்/திருத்துதல் என்பன உள்ளிட்ட தனியான வீடமைப்பிற்கான தனியார் துறைக்கான வர்த்தக

வரைபடம் 2.7 மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு மற்றும் சேமிப்புக்கள்(அ)




(அ) நடுத்தரகால பேரண்டப்பொருளாதார சட்டகத்தின் அடிப்படையிலான இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகள்

வங்கிக் கொடுகடன் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2015 யூன் இறுதியில் 32.5 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. தற்பொழுது நிலவும் தாழ்ந்த வட்டி வீதங்கள் மற்றும் மேம்பட்ட வியாபாரச் சூழல் என்பனவற்றின் பயன் காரணமாக இவ்வபிவிருத்திகள் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **2015 காலப்பகுதியில் அரச துறை முதலீடுகளின் செலவினம், 2014இல் மதிப்பிடப்பட்ட 12.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 15.4 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எறிவு செய்யப்பட்டது.** இவ்வீழ்ச்சிக்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் பாரியளவு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் மெதுவான போக்கு, நிலுவையிலுள்ள நிதியிடல் மற்றும் சூழல்தாக்க மீளாய்வு என்பனவே முக்கிய காரணமாகும். அரச முதலீடுகளில் ஏற்பட்ட பின்னடைவினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் 20.9 சதவீத வீழ்ச்சியை எடுத்துக் காட்டின. எனினும், அரசியல் உறுதிப்பாடு மற்றும் வெளிநாட்டு நிதியிடல் நடவடிக்கைகளில் இலக்கிடப்பட்ட கடன் பகிர்ந்தளிப்புக்களின் பெறக்கூடிய நன்மை என்பனவற்றின் பயன் காரணமாக ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் மூலதனச் செலவனமானது படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றமையானது 2015இல் அரச முதலீடுகளை மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 5 சதவீதத்தில் பேண இயலுமைப்படுத்தும்.

- **2015இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2014இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 853.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 515.1 மில்லியனாக விளங்கி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 39.6 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.** இக்காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்பட்ட சுருக்கத்திற்கு உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் தொடர்பான உட்பாய்ச்சல் 28.3 சதவீதத்தினாலும் பணிகள் தொடர்பானவை 61.2 சதவீதத்தினாலும் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். இக்காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் பெரும்பாலானவை உட்கட்டமைப்புடன் தொடர்பான செயற்றிட்டங்களாக இருந்ததுடன் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலில் ஏறத்தாழ 39 சதவீதமாக (ஐ.அ.டொலர் 159.5 மில்லியன்) விளங்கியது. பணிகள் துறையில் காணப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலில் அண்ணளவாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 31 சதவீதமாக தொகையிடப்பட்டதுடன் (ஐ.அ.டொலர் 204.8 மில்லியன்) தயாரிப்புத் துறையில் காணப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு ஐ.அ.டொலர் 148.0 மில்லியனாக அமைந்து 2015இன் முதலரைப்பகுதியில் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏறத்தாழ 29 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது.

வரைபடம் 2.8 முதலீட்டுச் சபை தொழில் முயற்சியாளர்களின் வெளிநாட்டு நேரடி முதலீடு (ஐ.அ.டொலர் மில்லியன்)




* கடன்கள் உள்ளடங்கலாக

## சேமிப்புக்கள்

- **உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் இவ்வாண்டுப் பகுதியில் மெதுவடையுமென எதிர்பார்க்கப்பட்டது.** அரச மற்றும் தனியார் நுகர்வுச் செலவினம் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பு உள்நாட்டுச் சேமிப்புக்களை தளர்வுறச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரச துறை நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை 2014இல் பதிவுசெய்யப்பட்ட மட்டத்திலும் பார்க்க குறைந்த மட்டத்தில் பேணுமென எதிர்பார்க்கப்படுகிறது. அரச துறை அரசிறைச் சேகரிப்புக்களை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டமைக்கிடையிலும் அரச துறைக் குன்றச் சேமிப்புக்கள் அரச நுகர்வுச் செலவினத்தில் அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. அதேவேளை, வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு தேய்வும் தேறிய நடைமுறை மாற்றல்களில் காணப்பட்ட மெதுவான தன்மையும் தேசிய சேமிப்புக்களை தளர்வுறச் செய்யக்கூடும்.

## 2016இற்கான வாய்ப்புக்கள்

- **நடுத்தர காலப் பேரண்டப் பொருளாதார கட்டமைப்பின் கீழ் எறிவு செய்யப்பட்டவாறு, பொருளாதாரம் 2016இல் ஏறத்தாழ 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் என்பன பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமாக பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சியானது

வெளிநாட்டுக் கேள்வியில் ஏற்படும் முன்னேற்றத்தின் உதவியுடன் உள்நாட்டுப் பக்கத்தில் ஏற்படும் தூண்டுதலளிக்கும் அபிவிருத்திகளின் தூண்டுதலுடன் வளர்ச்சியுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. நுகர்வுச் செலவினத்திலிருந்தான தொடர்ச்சியான பங்களிப்பு முதலீட்டுச் செலவினத்தில் எதிர்பார்க்கப்படும் மீட்சியுடன் இணைந்து உள்நாட்டுக் கேள்விக்குத் தூண்டுதலளிக்கக்கூடும்.

- **2016இல் வேளாண்மைத் துறை வலுவாக உத்வேகமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** அண்மைக் காலத்தில் உலகளாவிய சந்தையில் தேயிலை விலைகளிலும் இறப்பர் விலைகளிலும் காணப்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியின் காரணமாக உள்நாட்டு உற்பத்திகள் குறைவடைந்த போதும் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைந்ததும் இவ்வேற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கெள்வி மீண்டும் உத்வேகமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில், தெங்கினை அடிப்படையாகக் கொண்ட பண்டங்களுக்கான உலகளாவிய கேள்வியில் காணப்பட்ட வலுவான வளர்ச்சி உள்நாட்டு உற்பத்திகளின் அபிவிருத்திக்குத் தூண்டுதலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் 2016இல் இதன் வளர்ச்சி உத்வேகத்திற்குத் தொடர்ந்தும் உதவும். மேலும், சோளம், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், உழுந்து மற்றும் பெரிய வெங்காயம் போன்ற பல களப்பயிர்களின் உள்நாட்டு உற்பத்தி சாதகமான வானிலைநிலைமைகளினால் தொடர்ந்து விரைந்து வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பால் தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்தி வருகின்றமை உள்நாட்டு உற்பத்தி இயலாற்றலை உயர்த்தக்கூடிய விதத்திலான புதிய கால்நடைகளின் இறக்குமதி என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்கையில், 2016ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டு பாற்பண்ணைக் கைத்தொழில் உள்நாட்டு பால் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 55 சதவீதத்தினை பூர்த்திசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உள்நாட்டுச் சீனி உற்பத்தியும் சீனிக்கான மொத்த உள்நாட்டுக் கேள்வியில் ஏறத்தாழ 15 சதவீதத்தினை 2016இல் பூர்த்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளை ஆழ்கடல் மீன் உற்பத்திகள் மற்றும் நன்னீர் மீன்பிடி என்பவற்றின் எதிர்பார்க்கப்பட்ட விரிவாக்கத்துடன் 2016 இல் நாட்டின் மொத்த மீன் உற்பத்தி ஒரு முன்னேற்றத்தைக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு வேளாண்மைத் துறையில் வழங்கல் பக்கத்தில் இடம்பெற்ற இவ்வபிவிருத்திகளின் காரணமாக வேளாண்மைத் துறை 2016இல் ஒட்டுமொத்த வளர்ச்சி சாதகமாக பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **தயாரிப்பு நடவடிக்கைகள் 2015இன் எஞ்சிய காலப்பகுதியிலும் 2016இலும் வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் தொடர்ந்தும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரங்கள் இரண்டிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் நாட்டில் காணப்படும் பொருளாதார மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்பன இவ்வளர்ச்சியை எய்துவதற்கு சாதகமாகப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மீண்டும் தொடங்கியமை அதேபோன்று தனியார் துறைக் கட்டுமான நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கியமை என்பனவற்றின் காரணமாக தயாரிப்பு நடவடிக்கைகள் உத்வேகமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. புடவைகள், அணியும் ஆடைகள், இறப்பர் மற்றும் தோலினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் போன்ற ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள், ஆரோக்கியமான வெளிநாட்டு நிலைமைகள் மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகளில் நுழையும் அதிகரித்த வாய்ப்புக்கள் என்பனவற்றின் வசதியுடன் சாதகமாகச் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தாழ்ந்த பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள், உட்கட்டமைப்பின் அபிவிருத்தி, பொருளாதார மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்பன முதலீட்டாளர் நம்பிக்கையினை உயர்வடையச் செய்து முதலீடுகளுக்கு உள்நாட்டு ரீதியிலும் பன்னாட்டு ரீதியிலும் தூண்டுதலானது தயாரிப்பு நடவடிக்கைகளை வரிவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், பன்னாட்டுச் சந்தையில் காணப்படும் தாழ்ந்த பண்ட விலைகள் தயாரிப்புத் துறை நடவடிக்கைகளின் செயலாற்றத்தின் மீது கலப்பான தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

- **பணிகளுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட தூண்டுதல் 2016ஆம் ஆண்டுப் பகுதியில் தொடருமெனவும் இது ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகமளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.** இவ்வளர்ச்சியானது, வர்த்தகம் மற்றும் போக்குவரத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் போன்ற முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல்கள், தொடர்பூட்டல் நிதியியல் பணிகள் போன்றன உள்ளிட்ட இயக்கவாற்றல் மிக்கத் துறைகளுடன் இணைந்து கொண்டமையின் காரணமாக பரந்த அடிப்படையினைக் கொண்டதாக விளங்குமென எறிவு செய்யப்பட்டது. கடந்த அண்மை ஆண்டுகளில் நிலவிய தூண்டுதலளிக்கும் நாணயக் கொள்கை நிலையிலிருந்தும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படும் நிதியியல் நடவடிக்கைகள் குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளின் விரைவிற்குச் சாதகமான நிதியியல் சந்தை நிலைமைகளை வழங்குகின்றன. உலகளாவிய கைத்தொழில்கள் மேலும் தகவல் செறிந்தவையாக மாறி வருவதனால் நிகழ்ச்சித் தயாரிப்புக்களும் ஆலோசனை நடவடிக்கைகளும்

நாட்டின் பணி ஏற்றுமதிகளை உத்வேகப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பணிகளின் ஏற்றுமதிகள் உலகளாவிய பொருளாதாரத்தில், குறிப்பாக மேம்பட்ட பொருளாதாரங்களில் எதிர்பார்க்கப்படும் மீட்சிகளிலிருந்து நன்மையினைப் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, உயர் பெறுமதிகூட்டப்பட்ட பணிகளாகத் தோற்றம் பெற்றிருக்கின்ற தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகளும் கூட பணிகளுடன் தொடர்பான ஒட்டுமொத்த நடவடிக்கைகளுக்கு பங்களிக்கின்ற முனைப்பான பணிகளாகத் தொடர்ந்தும் விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **அரச மற்றும் தனியார் முதலீடுகள் இரண்டும் 2016இல் மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** கொள்கை வகுக்கும் சூழலில் ஏற்பட்ட படிப்படியான உறுதிப்பாட்டின் காரணமாக, முதலீட்டு நடவடிக்கைகள் மீதான அரச செலவினம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, 2015இல் மெதுவடைந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் 2016இல் அதன் உத்வேகத்தினை மீண்டும் பெற்றுக்கொள்ளக்கூடும். அதேவேளை, முதலீட்டாளர் நம்பிக்கையில் ஏற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றங்கள் தனியார் முதலீட்டு நடவடிக்கைகளை 2016இல் மேலும் வேகப்படுத்தும்.

- **2016 காலப்பகுதியில் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்குத் தேசிய சேமிப்புக்கள் முன்னேற்றம் காண்பது முக்கியமானதொன்றாகும்.** பொருளாதாரத்தின் முதலீட்டுக் கேள்வி 2016இல் மொ.உ. உற்பத்தியின் ஏறத்தாழ 29 சதவீதமாக இருக்குமென எறிவு செய்யப்பட்டதுடன் இது உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும். இதனைப் பொறுத்தவரை நாட்டின் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை நிரப்புவதற்கு வெளிநாட்டு நிதியிடலில் தங்கியிருப்பதனை மேலும் குறைப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் தனியார் மற்றும் அரச சேமிப்புக்கள் இரண்டும் ஊக்குவிக்கப்படல் வேண்டும். இறைத் துறைப் பக்கத்திலிருந்து, அரச முதலீடுகளில் நேர்க்கணிய மட்டமொன்றினை அடைந்து அதனை வலுப்படுத்தும் பொருட்டு இறைத்திரட்சி முயற்சிகளினூடாக நடைமுறைக் கணக்கு நிலுவைகளை மேம்படுத்துவது உள்நாட்டுச் சேமிப்புக்களையும் முதலீட்டிற்கான சூழ்நிலைகளையும் மேம்படுத்தப் பங்களிக்கும்.